

துணை முதலமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அவரது பிறந்த நாளன்று, சென்னை – 'குறிஞ்சி இல்லத்தில்' கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் தி.மு.க. தலைமை நிலைய நிர்வாகி ஆர்.பத்மநாபன் ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்கள்.



பிறந்த நாள் காணும் கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் தயாநிதிமாறன் எம்.பி. வாழ்த்துத் தெரிவித்தார்.



பிறந்த நாள் காணும் கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்துத் தெரிவித்தார்.




கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி 27.11.2024 அன்று இராணிப்பேட்டை நகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் இராஜேஸ்வரி திரையரங்கம் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரையில் Parryware Roca Bathroom Products Pvt Ltd மற்றும் Coromandel International Pvt Ltd ஆகிய நிறுவனங்களின் சமூக பங்களிப்பு நிதி ரூ.74 இலட்சம் மதிப்பீட்டில் 84 உயர்கோபுர மின்கம்பங்களுடன் 168 எண்ணிக்கையிலான 150W LED மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா. நகரமன்ற தலைவர் திருமதி. சுஜாதா வினோத், துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா, நகராட்சி ஆணையாளர் திருமதி. ப்ரீத்தி, நகராட்சி பொறியாளர் பரமுராசு, நகர செயலாளர் பூங்காவனம், நகர துணைச் செயலாளர் ஏர்டெல் குமார்MC, மாவட்ட பிரதிநிதி கிருஷ்ணன் MC, மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் Z.அப்துல்லா Mc, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத்Mc, மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### குலத்தொழில் முறையைக் கொண்டுவரும்

# விஸ்வகர்மா திட்டத்தை தி.மு.க. நிராகரிக்கிறது!

## புதுடெல்லியில் - கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

புதுடெல்லி, நவ.30 –

"குலத் தொழில் முறையைக் கொண்டுவரும் ஒன்றிய அரசின் திட்டத்தை தி.மு.க. நிராகரிக்கிறது" என்று நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறியுள்ளார்.

டெல்லியில் நேற்று முன்தினம் பத்திரிக்கையாளர் சந்திப்பில் பிரதமர் விஸ்வகர்மா திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல் படுத்தாது எனும் முடிவு குறித்த கேள்விக்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள் பதிலளித்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-



தி.மு.க. விஸ்வகர்மா திட்டத்தை முழுமையாக நிராகரித்துவிட்டது. தமிழ்நாட்டின் முதலமைச்சர், தி.மு.க.வின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விஸ்வகர்மா திட்டத்தை தி.மு.க. தீவிரமாக எதிர்ப்பதன் காரணத்தை ஏற்கனவே மிகத் தெளிவாக கூறி யுள்ளார்.

எனது நிலைப்பாடும் அதுதான். சாதி அமைப்பையும், பெற்றோர்களின் தொழிலையே குழந்தைகள் ஏற்க வேண்டும் எனும் குலத்தொழில் முறையையும் அத்திட்டம் இங்கு மீண்டும் கொண்டுவருகிறது. அதை நாங்கள் ஏற்க முடியாது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.


